# மலேசிய தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சியில் இந்திய அரசு சார்பற்ற அமைப்புகளின் பங்கு : ஓர் ஆய்வு

# The Role of Indian Non-Governmental Organisations in the Development of Malaysian Tamil Schools

மலர் ஜோதி பாலு / Malar Jothi Balu[1]

முனைவர் இரவிந்திரன் மாரையா / Dr.Ravindaran Maraya[2]

முனைவர்மோகன தாஸ் இராமசாமி / Dr.Mohana Dass Ramasamy[3]

## Abstract

The education system plays a vital role in building a brighter future for our nation's students. Thus, the Malaysian Government has been concerting many significant and well-recognised steps to provide a better Tamil education, which suits Malaysia's diverse cultural and ethnic landscape. The Malaysian education system, which branches to the public and private sectors, revolves around the Malaysian National Curriculum. The primary schools using Tamil and Chinese languages as the medium of instruction are labelled as vernacular schools. Apart from providing education in the Tamil language, these government-funded Malaysian Tamil vernacular schools play an essential role in imparting Indian cultural and religious values to the younger generation. This knowledge transfer is significant in maintaining a distinct identity while fostering national unity in multi-ethnic Malaysia. Currently, there are 527 Tamil primary schools in Malaysia and based on the 2021 record, a total of 80,434 Indian students have enrolled in these schools. Although the Government aids these Tamil schools, a voluntary hand from a non-governmental organisation (NGO) is still required to collaborate and contribute to improving the quality of education. In Malaysia, various NGOs support Tamil school students' well-being.

Date of submission: 2022-01-11
Date of acceptance: 2022-03-18
Date of Publication: 2022-07-28
Corresponding author's Name:
Dr.Ravindaran Maraya Email:
ravindaranm@um.edu.my

**Key Words:** Malaysian Education, Malaysia Tamil Schools, Tamil School Students, Non-Governmental Organizations.

### முன்னுரை

கல்விச் சேவை என்பது உலகில் மிகச்சிறந்த சேவையாகும். " ஆயிரம் கோயில்கள் கட்டுவதைவிட ஒரு பள்ளிக்கூடம் கட்டுவது சிறப்பு " என்பது பாரதியாரின் கூற்றாகும். மகாத்மா காந்தி, " சரியான கல்வி என்பது என்ன என்று மக்கள் அறியாது இருப்பதுதான் உண்மையான இடர்பாடு" என்கிறார்.

[1]The author is a Master Research student in Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. sujenjoe@gmail.com

[2]The corresponding author is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. ravindaranm@um.edu.my

[3]The author is a Senior Lecturer in the Department of Indian Studies, University Malaya, Kuala Lumpur, Malaysia. rmohana_dass@um.edu.my

மலேசியாவின் முதல் தமிழ்க்கல்வி 1816ஆம் ஆண்டு தொடங்கியது. 2022ஆம் ஆண்டுடன் 206 ஆண்டுகள் வரலாற்றைப் பதிவு செய்கிறது மலேசியத் தமிழ்க்கல்வி. 1957 ஆம் ஆண்டு மலாயா விடுதலை அடைந்தது. மலாயாவில் 1950களில் 888 தமிழ்ப்பள்ளிகள் இருந்தன. 2022ஆம் ஆண்டின் புள்ளி விவரங்களின் படி 527 தமிழ் பள்ளிகள் இன்றும் செயல்பட்டு வருகின்றன. அன்று தொடங்கி இன்று வரையிலும் மலேசியத் தமிழ்க்கல்வி பற்பல மாறுதல்களையும் பற்பல மேம்பாடுகளையும் கண்டு வந்துள்ளதை அனைவரும் அறிவோம். கல்விச் செல்வமே சிறந்த செல்வமாக விளங்குகிறது என்பதில் சிறிதும் சந்தேகம் இல்லை. தற்காலத்தில் உலகில் மனித மூலதனத்தையும் சமூக வளர்ச்சியியையும் உருவாக்குவதற்கு பள்ளிகளும் சமூகமும் ஒன்றோடொன்று இணைந்துச் செயலாற்ற வேண்டியது முக்கியம். (KPM, 2018)

ஆம், ஒரு சிறந்தப் பள்ளியினை உருவாக்குவது என்பது சாதாரணமான காரியம் அல்ல. நல்ல நிர்வாகம், சிறந்த ஆசிரியர்கள், தரமான கல்வி, எளிதல் புரிந்துகொண்டு சாதிக்கும் மாணவர்கள் என பல்வேறு கோணங்களை மட்டும் உள்ளடக்கியதல்ல பள்ளி. மாறாக, சமூகமும் பள்ளி நிர்வாகத்துடன் இணைந்து செயல்பட வேண்டும். ஒருவரின் வளர்ச்சியின் வெற்றிக்கு சமூகப் பங்கேற்பு ஒரு முக்கியமான நிபந்தனையாகும். கல்வித்திட்டம் மற்றும் இணைப்பாடத்திட்டம் மற்றுமின்றி பள்ளியின் பிற வளர்ச்சியானது, பள்ளிக்கும் சமூகத்திற்கும் இடையிலான கூட்டுப் பொறுப்பாகும். எனவே, அந்தக் கொள்கையின் அடிப்படையில், கல்வி அமைச்சு 1984ஆம் ஆண்டில் “பள்ளிகள் சமூக நிறுவனம்“ (Sekolah Sebagai Institusi Masyarakat) என்ற கொள்கையை அறிமுகப்படுத்தியது. 21ஆம் நூற்றாண்டில் அதிவேக தொழில்நுட்ப வளர்ச்சியை தொடந்து, பள்ளிகளில் பலமடங்கு மாறுதல்கள் செய்யப்படவேண்டிய கட்டாயம் ஏற்பட்டது. எனவே தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சியில் சமூகத்தின் பங்கு மிகவும் அவசியமானதாகவும் இன்றியமையாததாகவும் ஆனது. ஆகவே, பள்ளிகள் மற்றும் சமூகத்தினர் இடையிலான கொள்கை மீண்டும் மலேசிய அரசாங்கத்தால் வலுப்படுத்தப்பட்டது. அதுவே தொடர்ந்து “பள்ளிகள் பொதுமக்களின் உரிமை“ (Sekolah Milik Masyarakat) என்ற கொள்கையாக வலுப்படுத்தப்பட்டு அமலுக்கு வந்தது எனலாம். இனம், மதம் வேறுபாடின்றி நாட்டிலுள்ள அனைத்து பிள்ளைகளுக்குச் சமமான அளவில் கல்விச் சம்பந்தப்பட்ட உதவிகள் கிடைக்க வேண்டுமென்பதே, இக்கொள்கையை வலுப்படுத்தியதற்கான முக்கியக் காரணமாக விளங்கியது. இந்தப் பள்ளிகளுக்கான உதவிகளானது சரியான முறையில் கிடைக்கப்பெற்று, செலவிடப்பட வேண்டும் என்பதே அரசாங்கத்தின் முக்கிய நோக்கமாக இருந்தது (KPM, 2018).

கல்வியில் சமத்துவம் என்பது உலகின் பெரும்பாலான நாடுகளில் உள்ள அரசாங்கத்திற்கான கல்வியின் பால் கொண்ட முக்கிய குறிக்கோள்களில் ஒன்றாகும். இது சமூகபொருளாதார வேறுபாடுகள், கலாச்சாரம், குடும்பம் மற்றும் சமூக பின்னணி காரணிகளைப் பொருட்படுத்தாமல் அனைவருக்கும் நியாயமான மற்றும் சமமான கல்வி வாய்ப்புகளை உருவாக்குவதற்கான முயற்சிகளைக் குறிக்கிறது. குழந்தைகள் எனப்படுபவர்கள் வருங்கால நாட்டின் வளர்ச்சிக்கு முக்கியமான மனித வளமாகும். அவர்களை வடிவமைக்கும் திறன் கொண்ட அடிப்படைக் கல்வியை அரசாங்கமும், சமூகமும் ஒன்றினைந்து வழங்கவேண்டுமே ஒழிய இதுவானது வெரும் அரசாங்கத்தின் பொறுப்பல்ல. எனவே, கல்வி எனப்படுவது ஒரு நாட்டின் அரசாங்கத்தால் மட்டுமே சுமக்கப்படும் ஒரு முக்கியமான பொறுப்பாக இல்லாமல், அரசு சாரா நிறுவனங்கள், தனியார் துறை, மதம் சார்ந்த இயக்கங்கள் மற்றும் சமூகத்தில் உள்ள பல்வேறு முக்கிய பிரிவுகள் உட்பட அனைத்து மக்களின் கூட்டு முயற்சியாகும் (KPM, 2006).

## ஆய்வின் முன்னோடி

உலகில் பள்ளிகளையும் அதன் கல்வித்திட்டத்தையும் குறித்து பல நூல்களும் பல ஆய்வுகளும் வெளிவந்த வண்ணம் உள்ளன. இந்நூல்களும் ஆய்வுகளும்

பள்ளிகளையும் அதன் கல்வித்திட்டத்தையும் குறித்த கருத்துகளைப் புரிந்து கொள்ளவும், இந்த ஆய்வை மேலும் வலுப்படுத்தவும் துணை புரிந்ததென்றால் அது மிகையாகாது எனலாம்.

அவ்வகையில், மலேசிய கல்வி அமைச்சின் அறிக்கையில் 'பள்ளிகள் சமுதாயத்தின் சொத்து' (Sekolah Milik Masyarakat) என்ற கொள்கையினை நடைமுறைப்படுத்துவதற்கான வழிகாட்டுதலின்படி, சமூகம் என்பது தனிநபர்கள், சமூகக் குழுக்கள், பங்குதாரர்கள், அரசு நிறுவனங்கள், தனியார் கட்சிகள் மற்றும் பதிவுச் செய்யப்பட்ட அரசு சாரா நிறுவனங்கள் ஒன்றினைந்து அரசாங்கத்திற்குப் பக்கபலமாக நின்று பள்ளிகளை உயர்த்தும் பங்கினைச் செய்ய வேண்டும் என்கிறது (ரிறிவி 2018).

தொடர்ந்து, லத்தீபா அப்துல் லத்தீஃப் மற்றும் சித்தி நோர் அஜானி முகமது தோஹார் லைலி மூடா என்பவர்கள் 2018ஆம் ஆண்டில் மலேசிய அரபுப் பள்ளிகளின் வளர்ச்சியில், அரபு நாட்டவர்களின் பங்கினைப் பற்றி ஆய்வினை நடத்தியுள்ளனர். மலாய் இனத்தவர்களுக்கு அரபு மொழியானது மிகவும் முக்கியம் என்று கூறுகின்றனர். அதற்கு, அரப் நாட்டைச் சார்ந்த உதவிகள் தேவை என்கிறனர். இதன்வழி, இந்நாட்டில் அரபுப் பள்ளிகளுக்குப் பூர்த்திச் செய்யப்பட்ட தேவைகளை அறிய முடிகிறது. (Latifah Abdul Latiff. Siti Nor Azhani Mohd Tohar. Farah Laili Muda@Ismail,Anita Ismail, 2018).

அதனைத் தொடர்ந்து, மலேசிய சீன ஆய்வியல் துறையைச் சார்ந்த ஹோ கே சே என்பவர் தத்தம் தாய் மொழியினைக் காக்கும் இரண்டும் நிறுவனங்களைப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டுள்ளார். அவரின் கூற்றுப்படி, அப்பெரும் நிறுவனங்களால் அவர்களது தாய்மொழிகள் செவ்வனே காக்கப்படுகிறது என்பதை அறியமுடிகிறது (Ho Kee Chye, 2018).

அடுத்து, அரசு சாரா நிறுவனங்களின் வரலாற்றினை மிகவும் துள்ளியமாக எழுதியுள்ளார்கள் மக்மூர் தூமின் மற்றும் ரோபி நுர்லாடி அவர்கள். அவர்களின் ஆய்வின்படி, அரசு சாரா நிறுவனங்களின் வரலாற்றினை சுதந்திரத்திற்கு முன் மற்றும் சுதந்திரத்திற்குப் பின் என்று பிரிக்கலாம் என்கின்றனர் (Makmur Tumin dan Robi Nurladi, 2017).

மேலும், சித்தி ஐஷா மற்றும் முசிரின் மோசின் பள்ளியில் பெற்றோர் ஆசிரியர் சங்கத்தின் சேவைகளைப் பற்றிய ஆய்வினை மேற்கொண்டிருக்கின்றனர் (Siti Aisyah Mat Saad & Musirin Mosin 2021).

இறுதியாக, மோர்னின் ஹனிம் சலே. முகமது சம்சுதீன். சுஃபியன் மன்சர் அவர்கள் 2019 ஆம் ஆண்டு மலாயாவில் கல்வியில் அரசு சாரா நிறுவனங்களின் ஈடுபாட்டினை மிகவும் துள்ளியமாக விவரித்துள்ளார். அவரின் கூற்றுப்படி, அரசு சாரா நிறுவனங்கள் தங்களது சமூகத்திற்காக உழைத்தனர் என்கிறார் (Morni Hanim Salleh, and Mohd Samsudin, and Suffian Mansor, 2019).

### ஆய்வின் முக்கியத்துவம்

நாம் அனைவரும் அறிந்ததுபோல், தமிழ்ப்பள்ளிகளுக்கு வழங்கப்படும் நன்கொடைகளைப் பயன்படுத்துவதற்கான பயனுள்ள வழிகளைப் பற்றி மேலும் அறிந்து கொள்வது அவசியம். கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்குத் தமிழ்ப்பள்ளிகளின் பங்களிப்பு பற்றிய விரிவான மற்றும் தெளிவான விளக்கத்தை இந்த ஆய்வு வழங்கும். இந்த ஆய்வின் முடிவுகள், மேலும் இத்துறையில் ஆராய்ச்சியை மேற்கொள்வதில் ஆர்வமுள்ள எந்தவொரு தரப்பினருக்கும் ஒரு குறிப்பாகப் பயன்படுத்தப்படலாம். தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்குச் சிறிய அல்லது பெரிய முகமைகள் தேவைப்பட்டாலும், இந்திய அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து பெறப்பட்ட பங்களிப்புகளும் நன்கொடைகளும் தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சிக்கு சரியான முறையில் பயன்படுத்தப்பட வேண்டும். இந்த ஆய்வு தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சி தொடர்பாக ஒரு சமூகவியல் ஆய்வாக ஆய்வு செய்யப்படுகிறது.

## ஆய்வின் நோக்கம்

சமீப காலமாக உருமாற்றம் காணும் நம் நாட்டின் கல்வித் திட்டத்திற்காக மாணவர்களுக்குப் பலவகையான அடிப்படைத் தேவைகளைத் தவிர்த்து, இன்னும் பிற வசதிகளும் கொண்ட பள்ளிக்கூடங்கள் தேவைப்படுகிறது என்பதில் சிறிதும் மாற்றுக் கருத்து இல்லை எனலாம். இவ்வாய்வானது, மொத்தம் மூன்று நோக்கங்களை அடைய நடத்தப்படுகிறது. அதுவானது, பள்ளி வளர்ச்சிக்கு பங்களிக்கும் இந்திய அரசு சாரா நிறுவனங்களை அடையாளம் காணும் முயற்சியாகும். மேலும், தமிழ்ப்பள்ளிகளுக்கு வழங்கப்படும் பங்களிப்புகளின் வகைகளைப் பற்றி விவாதித்து, இன்னும் முக்கியமாக எவ்வாறான உதவிகள் தமிழ்ப்பள்ளிகளுக்கு அதிகம் தேவைப்படுகின்றன என்பதை அறியவதற்காகவும் இவ்வாய்வு மேற்கொள்ளப்படுகிறது. இறுதியாக, நாட்டிலுள்ள தமிழ்ப்பள்ளிகள் இந்திய அரசு சாரா நிறுவனங்களிடமிருந்து பெற்றப் பங்களிப்புகள் அல்லது உதவிகள் மூலம் அடைந்துள்ள வளர்ச்சியை பகுப்பாய்வு செய்வதற்காகவும் இந்த ஆய்வு மேற்கொள்ளப்படுகிறது.

## ஆய்வுமுறை

ஆராய்ச்சி முடிவுகளைச் சேகரிப்பதில் ஆராய்ச்சி முறையானது முக்கிய பங்கினை வகிக்கிறது. இந்த ஆய்வில், ஆராய்ச்சியாளர் நூலக ஆய்வினைப் பயன்படுத்தி, அரசு சார்பற்ற நிறுவனங்களைப் பற்றிய தகவல்கள் சேகரித்துள்ளார். மேலும், சம்பந்தப்பட்ட இந்திய அரசு சாரா மற்றும் அரசு நிறுவனங்களுடன் நேர்காணலின் வழி, அவர்களது சேவையையும் அதன் நோக்கத்தையும் முழுமையாக அறியமுடிகிறது. இறுதியாக, இந்த ஆய்வை மேற்கொள்ள பண்புசார் விவரிப்பு முறை (Qualitative) பயன்படுத்தப்பட்டுள்ளது. அதன் அடிப்படையில், பகுப்பாய்வு முறையில் அறிவுசார் நூல்கள், ஆய்விதழ்கள், கல்வி இதழ்கள் போன்றவற்றிலிருந்து பெறப்பட்ட அனைத்துத் தரவுகளும் ஆய்வுச் செய்யப்பட்டுள்ளன.

## அரசு சாரா அமைப்புகள் என்றால் என்ன?

அனைத்துலக அரசு சார்பற்ற அமைப்புக்களின் வரலாறு 19 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியிலிருந்து தொடங்குகின்றது எனலாம். எனினும் அரசு சார்பற்ற அமைப்பு எனும் பெயர் 1945 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் அவையின் தோற்றத்துக்குப் பின்னரே பெரிய அளவில் பயன்பாட்டுக்கு வந்தது. அரசு சார்பற்ற அமைப்பு அல்லது அரசு சாரா தொண்டு நிறுவனம் (Non-governmental organization) என்பது தனியாரால் அல்லது அரசு பங்களிப்பு இல்லாத அல்லது சார்பற்று, சட்டப்படி உருவாக்கப்படுகின்ற அமைப்புகளாகும். அரசின் தலையீடின்றி, மக்கள் நலனுக்காக குழுவாக ஒருங்கிணைந்து செயல்படும் அமைப்புகளை தன்னால்வர் தொண்டு நிறுவனங்கள் என குறிப்பிட்டது. லாப நோக்ககமற்றதாக, மனித உரிமைகளைக் காக்கும் வகையில், குற்ற செயல்களில் ஈடுபடாத வகையில் இவற்றின் செயல்பாடுகள் இருக்க வேண்டும் என்று வகுத்தளித்துள்ளது ஐக்கிய நாடுகள் சபை (ரமேஷ், 2018). மலேசியாவில் அரசு சாரா நிறுவனங்களின் வரலாற்றானது, சுதந்திரத்திற்கு முன் மற்றும் சுதந்திரத்திற்கு பின் என பிரிக்கலாம். இவ்விரண்டு காலக்கட்டத்திலும் பல வேறுபாடுகள் இருந்ததது (மக்மூர் துபின் மற்றும் ரோபி நுர்விடி, 2017). அரசினால் முழுமையாக அல்லது பகுதியாக பகுந்தயளிக்கப்படும் அமைப்புகள் தங்கள் அரசு சார்பின்மையைக் காத்துக் கொள்வதற்காக அரசுக்குத் தமது அமைப்பில் எவ்வித உறுப்புரிமையும் அளிப்பதில்லை. பல்வேறு நாடுகளில் தேசிய அளவிலும், உலக அளவிலும் பல அரசு சார்பற்ற அமைப்புகள் இயங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் உள்ள சட்டப்பூர்வமான நடவடிக்கைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியம். இவை வழக்கமாக இலாப நோக்கற்ற நிறுவனங்களாகவே செயல்படுகின்றன. பல்வேறு நாடுகளில் தேசிய அளவிலும், உல்க அளவிலும் பல அரசு சார்பற்ற அமைப்புகள் இயங்கி வருகின்றன. உலக அளவில் 40,000,000 அரசு சார்பற்ற அமைப்புக்களும் இயங்குவதாக மதிப்பிடப்பட்டுள்ளது.

### இந்திய அரசு சாரா அமைப்புகள்

நமது மலேசிய நாட்டில் பல அரசு சாரா நிறுவனங்கள் தோன்றியுள்ளன. அதில் பல நிறுவனங்கள் முறையான பதிவைக் கொண்டவை ஆகும். ஓம்ஸ் அறவாரியத்தின் தமிழ்ப்பள்ளிகளுக்குக் கிடைத்தப்பெற்ற தொண்டுகள் எண்ணில் அடங்கா. இந்நிறுவனத்தினால் தமிழ்ப்பள்ளிகளும் மாணவர்களும் பற்பல வெற்றிகளைக் குவித்துள்ளனர். மலேசிய தமிழ் அறவாரியம் (Tamil Foundation Malaysia) என்பது மலேசியாவிலுள்ள தமிழ்ப்பள்ளிகள் தலைநிமிர்ந்து நிற்கச் செய்ய வேண்டும் எனும் கொள்கையில் உருவாக்கப்பட்ட ஓர் அரசு சார்பற்ற அமைப்பாகும். இதனை மலேசியத் தமிழ் அறவாரியம் என்றும் அழைக்கின்றார்கள். இந்த அறவாரியமானது, கட்சி சாராததாகும். மேலும், தைவான் புத்த அறவாரியம் (TZU-CHI)யானது இனம், மதம் பாராது தமிழ்ப் பள்ளியில் பயிலும் ஏழையான மாணவர்களுது தேவைகளைப் பூர்த்துச் செய்கின்றன. இதுவானது இலாப நோக்கமில்லாது தமிழ்ப் பள்ளிகளின் தரத்தை உயர்த்தி, அந்தப் பள்ளிகளுக்குச் சரியான நிபுணத்துவ அடிப்படையில் வழி அமைத்துக் கொடுப்பதே தமிழ் அறவாரியத்தின் தலையாயக் கொள்கையாகும். மலேசிய இந்து சங்கமும் பல வகையில் தமிழ்ப்பள்ளிகளுக்குப் பல உதவிகளைச் செய்து வருகிறது. மேலும், இவைகளைத் தவிர இன்னும் பல அரசு சாரா இயக்கங்கள் தங்களது பெயர்களை வெளிக்காட்டாமல் தமிழ்ப்பள்ளிகளுக்குப் பலவகையான உதவிகளைச் செய்கின்றனர்.

### தமிழ்ப்பள்ளிகளுக்குச் செய்யப்படும் உதவிகள்

அரசு சார்பற்ற அமைப்புகள் தமிழ்ப்பள்ளிகளுக்கு முழுமையாகச் சேவை செய்ய வேண்டும் என்ற எண்ணத்தில் செயல்படுவதை நாம் அறிகிறோம். தமிழ்ப்பள்ளி மாணவர்கள் எதிர்காலத்தில் நல்ல வழியில் சிறந்து விளங்க வேண்டும் என்பதே அவர்களது முக்கியமான நோக்கமாக உள்ளது. அனைத்து தமிழ்ப்பள்ளிகளுக்கும் போதுமானதான வகையில் வளமான விரிவான உதவிகளை அந்தந்த பள்ளிகளின் நிர்வாகங்கள், பெற்றோர் ஆசிரியர் சங்கம் மற்றும் பள்ளி வாரியங்களுடன் இணைந்து அந்தந்த பள்ளிகளுக்கான உதவிகளை வழங்குகிறது. இதுவரையில் அரசு சார்பற்ற நிறுவனங்கள் நமது தமிழ்ப் பள்ளிகளிகுப் போதுமான பள்ளிகளின் கட்டமைப்பு, கற்றல் வளங்கள் மற்றும் அதற்கான வசதிகள் போன்றவற்றை அளித்துள்ளனர்.

### 1.கற்றல் கற்பித்தல்

பல அரசாங்க சார்பற்ற நிறுவனங்கள் கல்விக்கே முதன்மை வழங்கி அதிக உதவிகள் வழங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. 21ஆம் நூற்றாண்டு கல்வி முறையில் அதிகளவில் தொழிட்நுட்ப சாதனங்கள் தமிழ்ப்பள்ளிகளுக்குத் தேவைப்படுகின்றன. ஆகவே, பல அரசு சாரா நிறுவனங்கள் தமிழ்ப் பள்ளிகளுக்கு திறன் பலகை (Smart Board) வழங்கியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.(திரு.மேனன் கிளன்மேரி தமிழ்ப்பள்ளி) இதன்வழி, பல்லாயிரக்கணக்கான தமிழ்ப்பள்ளி மாணவர்கள் பயனடைந்துள்ளனர். தமிழ்ப் பள்ளி ஆசிரியர்களும் நமது மாணவர்களுக்குப் பலதரப்பட்ட முறையில் கல்வியைப் போதிக்கின்றனர். நமது மாணவர்களும் தனியார் பள்ளி மாணவர்கள் போல, கல்வியைப் பெறுவதற்கு இது மிகவும் உதவுகிறது. மேலும், மாணவர்கள் தங்களது சிறு வயதிலேயே இதுபோன்ற தொழில்நுட்ப சாதனங்களைப் பயன்படுத்தும் முறையை அறிய முடிகிறது.

### 2.கட்டடங்கள் சீரமைப்பு

மேலும் சில அரசு சாரா நிறுவனங்கள், தமிழ்ப்பள்ளிகளின் கட்டடங்களைச் சீர்ப்படுத்தவும், சுற்றுச்சூழலை அழகாக்கவும் பெரிதும் உதவுகின்றனர். அதிகளவில் மாணவர் எண்ணிக்கையுள்ள தமிழ்ப்பள்ளிகளில் வகுப்பறை பற்றாகுறைகளையும் அரசு சார்பற்ற நிறுவனங்களால் நிவர்த்தி செய்யப்பட்டுள்ளது. நமது பள்ளிகள் பல முழுமையான அரசாங்க உதவியினைப் பெறுவதில்லை என்பதை அனைவரும் அறிவோம். ஆகையால் கட்டடங்கள்

சீரமைப்பு மற்றும் பற்றாக்குறைகளை நிவர்த்திச் செய்வதற்கு பெரும்பாலான பள்ளிகளுக்கு நிதி தேவைப்படுகிறது. மேலும், தற்காலத்தில் தமிழ்ப்பள்ளிகளின் மாணவர்களின் சேர்க்கையும் கணிசமான அளவில் உயர்ந்துள்ளது. பள்ளிகளுக்குத் தேவைப்படும் கட்டட வசதிகளை அரசாங்கத்தால் உடனடியாக நிவர்த்திச் செய்வது சாத்தியமற்றது. ஆகவே, பற்பல அரசு சாரா நிறுவனங்கள் தமிழ்ப்பள்ளிகளின் பள்ளி வாரியத்துடன் இணைந்து, கட்டடங்களைச் சீர்ப்படுத்தவும், புதிய கட்டடங்களைக் கட்டவும் பெரிதளவும் உதவுகின்றன (காஸ்டவில் தமிழ்ப்பள்ளி).

**3.கணினி**

கணினியானது மாணவர்களை நவீன தொழில் நுட்பத்திற்கு பழக்கப்படுத்துவதோடு மட்டுமல்லாமல் புதுமையான, அறிவியல் பூர்வமான கற்றலுக்கும் மாணவர்களைத் தயார் செய்கிறது. கணினியின் மூலம் கற்பதால் மாணவர்கள் கற்பித்தல் பொருள்களை அவரவர் கற்கும் வேகம் மற்றும் தேவைக்கேற்ப பயன்படுத்திக் கொள்ளலாம். இதனை கருத்தில் கொண்டு அரசு சாரா நிறுவனங்கள் தமிழ்ப் பள்ளிகளில் புதிய கணினி அறைகளையும் (தொழிலதிபர் ஜீ.வி நாயர் பூச்சோங் 14வது மைல் தமிழ்ப்பள்ளி) மற்றும் கணினி அறைகளைப் புதிப்பித்தல் நடவடிக்கைகளையும் அதிகம் செய்கின்றனர். இன்னும் சிலர், மாணவர்களுக்குத் தேவைப்படும் மடிக்கணினி தேவையைப் பூர்த்திச் செய்கின்றனர். முக்கியமாக, கடந்த கோவிட் தொற்றினால், இல்லிருப்பு கற்றலில் ஈடுபட்ட மாணவர்களுக்காகப் பெருமளவில் கைத்தொலைப்பேசிகள், மடிக்கணினிகள் மாணவர்களுக்கு அரசு சாரா நிறுவனங்களால் வழங்கப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது (மலேசிய செம்பிறை சங்கம் கிளன்மேரி தோட்டத் தமிழ்ப்பள்ளி).

**4.புறப்பாட நடவடிக்கை**

புறப்பாட நடவடிக்கைகளிலும் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் உலகத் தரம் வாய்ந்த மாணவர்களாக உயருதல் அவசியமாகும். இதற்கு அனைவரும் இணைந்து செயலாற்ற வேண்டும். அரசு சாரா நிறுவனங்கள் மாணவர்கள் கலந்துக் கொள்ளும் வெளிநடவடிக்கைகளுக்கும் போட்டிகளுக்கும் தேவையான அனைத்து செலவீனங்களையும் ஏற்றுக் கொள்கின்றனர் (பள்ளி மேலாளர் வாரியம் மிட்லண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி). ஒரு சில பள்ளிகளில், வருடாந்திர விளையாட்டுப் போட்டிகளை நடத்துவதற்கு, இதுபோன்ற அமைப்புகள் பெரிதும் உதவுகின்றன. இதன்வழி நமது மாணவர்களும் உலக தரம் வாய்ந்த போட்டி விளையாட்டுகளில் ஈடுபட முடிகிறது.

**5.உணவு**

பள்ளிகளுக்கு வரும் ஏழ்மையான மாணவர்களுக்கு பள்ளியிலேயே 2 வேளை உணவுகள் வழங்கப்படுகின்றன (சுவாகாஷே கிளன்மேரி தமிழ்ப்பள்ளி). இதற்கான செலவினங்களை சிறிய அளவில் செயல்பட்டுவரும் தன்னார்வலர்கள் செய்கின்றனர். பல மாணவர்களுக்கு அரசாங்கத்தால் சத்துணவு வழங்கப்பட்டாலும், இன்னும் இவ்வாறான உதவிகள் தேவைப்படும் குழந்தைகள் அதிகளவில் இருக்கின்றனர்.

**6.பிற உதவிகள்**

பல தமிழ்ப் பள்ளிகளில் வறுமை குடும்பத்திலிருந்து வரும் மாணவர்கள் அதிகளவில் உள்ளனர். அம்மாணவர்களுக்கு வருடாந்தோரும் தேவையான சீருடைகள், புத்தகங்களை வாங்கிக் கொள்வதற்கான பற்றுச்சீட்டுகள் வழங்க்கப்படுகின்றன (இந்து சங்கம்கிளன்மேரி தமிழ்ப்பள்ளி). மேலும், ஏழ்மையான மாணவர்களின் குடும்பத்திற்கு ஒவ்வொரு மாதமும் தேவையான சமையல் பொருட்கள் வழங்கப்படுகின்றன (பிரம்பா நிறுவனம் கிளன்மேரி தமிப்பள்ளி). ஓம்ஸ் அறநிறுவனத்தின் மூலம் பல பள்ளிகளுக்கு மாணவர்களுக்கான போக்குவரத்து வசதிகளுக்காக வண்டிகளும் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

**தமிழ்ப்பள்ளிகளின் வளர்ச்சி**

இந்திய அரசு சாரா நிறுவனங்களின் தொடர் உதவிகள் மற்றும் ஆதரவினால்

மலேசிய தமிழ்ப்பள்ளிகள் பெரும் வளர்ச்சியினை அடைந்துள்ளது என்று தாராளமாக கூறலாம். அனைத்துலக போட்டிகளில் தமிழ்ப்பள்ளி மாணவர்கள் அதிகளவில் வெற்றி வாகையினைச் சூடியுள்ளனர். கட்டட வசதிகளின்றி தவித்த பல தமிழ்ப்பள்ளிகளுக்கு அதிநனவீன கட்டடங்கள் உருவாகியுள்ளன. கணினி வசதிகள் இல்லாத பல தமிழ்ப்பள்ளி மாணவர்களின் கரங்களில் இன்று திறன்பேசிகள் மற்றும் மடிக்கணினிகள் அலங்கரிக்கின்றன. மேலும், அடிப்படை வசதிகள் இல்லாத மாணவர்களுக்குத் தேவையான அடிப்படை வசதிகள் செய்துக்கொடுக்கப்பட்டிருக்கின்றன. ஒரு சில தமிழ்ப்பள்ளிகளில் ஏழ்மை மாணவர்களுக்கு கூடுதல் வகுப்பு நடத்தி அவர்களின் தேர்ச்சி நிலையை சிறப்படையச் செய்துள்ளனர், அரசு சாரா இயக்கத்தினர். தமிழ்ப்பள்ளி நூலகத்திற்காகப் பல கதைப் புத்தகங்கள், பொது அறிவு புத்தகங்கள் வாங்கி கொடுத்துள்ளனர். வசதி குறைவான மாணவர்களை தத்தெடுத்து, அவர்களது கல்விச் செலவினத்தையும் பலர் ஏற்றுள்ளனர். இவ்வாறாக, அரசு சார்பற்ற நிறுவனங்கள் தமிழ்ப்பள்ளிகளுக்குச் செய்த மற்றும் செய்து வருகின்ற சேவைகளை எண்ணிலடங்கா.

### முடிவுரை

முன்னேற்றத்திற்கான இலக்குகள் என்பது கல்வியானது என்னென்ன இலக்குகளை நோக்கிச் சென்று கொண்டு இருக்கிறது என்பதைப் பற்றியதாகும். கல்வி சமுதாயத்தில் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்; பொருளாதார மேம்பாட்டினை உறுதி செய்ய வேண்டும்; ஒவ்வொரு பிரிவினருக்கும் தங்கள் இலக்குகளை தாங்கள் விரும்பிய படி நாடிச் செல்ல வாய்ப்புகள் உருவாக்க வேண்டும். கல்வியறிவானது நுண்ணறிவு பெறுவதற்கு மட்டுமல்லாது இப்பிறவிக்கு நன்மை சேர்க்கும் செல்வத்தினைப் பெறுவதற்கும் வழிவகுக்கிறது. தமிழ்ப்பள்ளி மணவர்களின் மேம்பாட்டை மையமாகக் கொண்டு, இந்திய அரசு சாரா நிறுவனங்கள் பணியாற்றி வருகின்றனர். சரியான கல்வித் திட்டங்களைச் ச்யல் படுத்தி மேற்பார்வை இட்டால், சமுதாயத்துன் பல கூறுகளிலும் அதன் பயன் சென்று அடையும் என்பது உண்மை. மலேசியத் தமிழ்ப்பள்ளி மாணவர்களின் வளர்ச்சியை முக்கிய இலக்காகக் கொண்டு பல்வேறு மறுமலர்ச்சி நடவடிக்கைகளை இந்நிறுவனங்கள் மேற்கொண்டு வருகின்றன என்பதை அறிந்தோம்.

## References


Kementerian Pendidikan Malaysia. (2018). *Garis Panduan Pelaksanaan Sekolah Milik Masyarakat*. Kementerian Pendidikan Malaysia.

Mornin Hanim Salleh & Mohd Samsudin Suffian Mansor. (2019). *Penglibatan Organisasi Badan Bukan Kerajaan dalam Pendidikan di Tanah Melayu*. 1920-1950-an. UKM.

Ho Kee Chye. (2018). *Peranan Dong Jiao dan Dewan Bahasa Pustaka dalam Pengendalian dan Perkembangan Pendidikan Bahasa Ibunda*. Pusat Pengajian Cina Malaysia.

Ramesh, M. (2018). *Ivargalin Nookkamthan Enna?*

Samikkanu Jabamoney Ishak Samuel. (2018). Perak Maanilath Tamilkalvi Valarchiyil Thirunelveeli Tamil Kristuvargalin Panggu", *Journol of Tamil Peraivu*. (Vol.7, pp.18-26).

Latifah Abdul Latiff, Siti Nor Azhani Mohd Tohar, Farah Laili Muda. (2018). *Sumbangan orang Arab terhadap perkembangan madrasah atau sekolah Arab di Malaysia*.

Makmor Tumin dan Robi Nurhadi (2017). *Sejarah Dan Perkembangan Badan Bukan Kerajaan (NGO) Di Malaysia*.

Siti Aisyah Mat Saad & Musirin Mosin Universiti Malaysia Sabah (2021). *Sumbangan PIBG Terhadapm Kesepaduan Sosial di Sekolah (The PTA (Parent-Teacher Association) Contribution Towords Social Cohesion at Schools*

Shamrahayu A Aziz. (2016). *Peranan NGO terhadap Relativisme, Berita Harian.*

Kartter Arokiaraj, A. (2021). "Kalvi Enathu Urimei", *Journol of Tamil Peraivu.* (Vol. 10 , No.1).

Ibrahim Saad. (1990). *Perubahan Pendidikan di Malaysia*. Kuala Lumpur: Dewan Bahasa dan Pustaka.

Hobarth Williams Soselisa. (2019). *Partisipasi Masyarakat dalam Pembangunan di Bidang Pendidikan Dasar di Kecamatan Pulau-Pulau Terselatan Kabupaten Maluku Barat Daya (MBD) Provinsi Maluku.*